# DEPOSITION OF WITNESS

## In the Court of Judicial Magistrate No.II, Mettur

**Case No : CMP No.1/2025**

**C.C. 427/2024**

**Prosecution witness : ம .சா.1** **Date : 28.04.2025.**

| | |
|---|---|
| **Name : ராமன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேட்டூர் தெர்மல் அனல் மின் நிலையத்தில் செயற் பொறியாளராக பணியாற்றி வருகிறேன். அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அதிலுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். எங்கள் நிறுவனத்தில் செல்வராஜ் என்பவர் உதவி பொறியாளராக பணிபுரிந்து வருகிறார். கடந்த 01.11.2019 முதல் 30.11.2019 வரையிலான செல்வராஜ் என்பவருடைய வருகை பதிவேடு கொண்டு வந்துள்ளேன். அசல் ஆவணம் நீதிமன்ற பார்வைக்கு சமர்பிக்கிறேன். அதன் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். 16.11.2019 ம் தேதி செல்வராஜ் என்பவர் எந்த ஷிப்டில் வேலைக்கு வந்துள்ளார் என்றால் இரண்டாம் ஷிப்ட்டிற்கு வேலைக்கு வந்துள்ளார். எங்கள் அலுவலகத்தில் பொதுவாக நான்கு ஷிப்டுகாளக வேலை நடந்து வரும்.

2) நான்கு ஷிப்ட்டும் எந்த நேரம் முதல் எந்த நேரம் வரை இயங்குகிறது என்பதற்கான ஆவணத்தை தாக்கல் செய்ய நீதிமன்றம் கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டு வந்துள்ளேன். 01.11.2019 ம் தேதி முதல் 30.11.2019 தேதி வரையிலான வருகை பதிவேடு நகல் **ம.சா.ஆ.1** ஆகும். 01.11.2019 ம் தேதி முதல் 30.11.2019 தேதி வரையிலான நான்கு ஷிப்ட்டிற்கும் உண்டான பொது

வேலை நேரம் குறித்த நேர அட்டவணை **ம.சா.ஆ.2** ஆகும். 16.11.2019 ம் தேதி செல்வராஜ் என்பவர் இரண்டாம் ஷிப்டில் மதியம் 1.00 மணியிலிருந்து இரவு 9.00 மணி வரை பணியிலிருந்தார் என்று வருகை பதிவேட்டில் உள்ளது. அவர் நிறுவனத்தில் வேலை செய்த போது வெளியே செல்ல அதிகப்படியான வாய்ப்பு உள்ளதா என்றால் வேறு ஆவணங்களான Log புக்கை பார்த்தால் தான் சொல்ல முடியும். மேற்சொன்ன தேதியில் பணியிலிருந்தார் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்துள்ளேன்.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

3) கடந்த 16.11.2019 ம் தேதி மாலை 06.30 மணிக்கு செல்வராஜ் என்பவர் பணியிலிருந்தாரா என்றால் பணிக்கு வந்தார். பிறகு 16.30 மணிக்கு அவசர நிலையாக இருந்திருக்கலாம் மற்ற நபரிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு சென்றிருக்கிறார். 16.11.2019 ம் தேதி வெளியே என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. பிறகு எப்போது உள்ளே வந்தார் என்றால் வரவில்லை.

<u>அனுமதியின் பேரில் மறுவிசாரணை</u>

4) என்னிடமுள்ள ஆவணத்தை வைத்து வேலையில் இருந்தார் என்பதை உறுதியாக சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது, இந்த ஆவணத்தை வைத்து இரண்டாம் ஷிப்டில் வேலை செய்தார் என்பதை சொல்ல முடியும். இரண்டாம் ஷிப்ட் நேரம் மதியம் 01.00 மணி முதல் இரவு 09.00 மணி வரை என்றால் ஆமாம்.

குறுக்கு விசாரணை இல்லை.

ஓம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நடுவர் எண்.2
மேட்டூர்.